தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 10, ஸ்ரீமுக — திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 23, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

‘‘குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.’’

குடிமக்களைப் பாதுகாத்தலும் அவர்கள் குற்றம் செய்தால் அதற்காக அவர்களைத் தண்டித்தலும் அரசனது கடமைகள் ஆகும். தண்டித்தல் என்பது அரசனுக்கு வலியன ஆகாது.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 441, 442, 443 ஆகியவை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

வினா எண்கள் 444, 445 ஆகியவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றன.

வினா எண் 446, திரு. ஏ. எம். பரமசிவன், இருக்கையில் இல்லை. திரு. அமர்நாத் கேட்கிறார்
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்,

446— [1993 ஏப்ரல் 23

மதுரை பெரியார் பேருந்து நிலையம், கட்டபொம்மன் சிலைக்கு இடையில் சுரங்கப்பாதை அமைத்தல்.

*9087— திரு. ஏ. எம். பரமசிவன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் பேருந்து நிலையம், கட்டபொம்மன் சிலைக்கு இடையில் பாதசாரிகளின் நலன் கருதி சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டம் எதுவும் இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரம் மிகப் பழமை வாய்ந்த நகரமாக இருக்கிறது. மேலும் மதுரையிலே உள்ள பெரியார் பேருந்து நிலையம் ஒரே ஒரு பேருந்து நிலையமாக இருக்கிற காரணத்தால் அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. மற்ற வாகனங்கள் கடந்து செல்லவேண்டுமென்றால் அரசரடி பாலம் வழியாகத்தான் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. பாதசாரிகளும் அந்த வழியாகத்தான் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. எனவே உன்னிப்பாக அதைப் பார்க்கின்ற நேரத்திலே மதுரை பெரியார் பேருந்து நிலையம், கட்டபொம்மன் சிலைக்கு இடையிலே சுரங்கப் பாதை ஒன்று அமைவது அவசியமாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்ற நிதி ஆண்டிலாவது அல்லது உலக வங்கிக் கடன் உதவியுடனாவது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சுரங்கப் பாதைகள் அமைக்கின்றபோது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழேதான் இந்தப் பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். தற்போது மதுரையிலே பல்வேறு திட்டங்கள், ரிங்ரோடு போடுவது போன்ற திட்டங்கள் எல்லாம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழே வருகின்ற காரணத்தாலே ஒரே நேரத்திலே பல்வேறு வேலைகளை ஒரு நகரத்திற்கு எடுத்துச் செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகவே படிப்படியாக இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றியதற்குப் பின்னாலே அதை அரசு பரிசீலிக்கலாம் என்று கருதுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்திய மூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பெரியார் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள கட்டபொம்மன் சிலையைச் சுற்றி 4 பிரதான சாலைகள்—நகரின் நான்கு பிரதான சாலைகள்- வந்து சேருகின்றன— அத்தோடு பெரியார் பேருந்து நிலையத்தி லிருந்து வெளியே வரும் பேருந்துகளும் அந்த வழியிலிருந்து திரும்ப வேண்டியிருக்கிறது. அந்தப் பிரதான சாலை வழியாகத்தான், வேறு பகுதிகளிலேயிருந்து வருகின்ற பேருந்துகளும் மதுரை நகரத்தின் உள்ளே நுழைய வேண்டியதாகவும் வெளியே செல்ல வேண்டியதாகவும் இருக்கிறது. அந்த இடத்திலே எப்போதுமே குறைந்த பட்சம் 500 பாதசாரிகள் ரோட்டைக் கடப்பதற்காக காத்து நிற்கின்ற நிலைமை இருக்கிறது. அவசரத்தில் பேருந்து நிலையத்திற்குச் சென்று குறித்த பஸ்ஸை பிடிப்பதற்கு முயற்சித்தால் விபத்து ஏற்படுகின்ற ஆபத்தும் இருக்கிறது. சென்னை மாநகரத்தில் அண்ணா சிலையைச் சுற்றி 3 வழி சுரங்கப்பாதை அமைத்ததைப் போன்று, மதுரையில் கட்டபொம்மன் சிலைக்கு அருகில் 4 வழி சுரங்கப் பாதை அமைத்தால்தான் பாதசாரிகளுக்கு வசதியாக அமையும். பேருந்துகளும், இதர வாகனங்களும் தாராளமாக கடந்து செல்ல இயலும். அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்பட வேண்டிய யோசனைதான். இருந்தாலும் 4 வழி சுரங்கப்பாதை என்கின்றபோது நமக்கு இருக்கின்ற நிதிப் பிரச்சினை எந்த நிதி உதவியின் கீழே அதைச் செய்யலாம் என்பதெல்லாம் வருகின்ற காரணத்தாலேதான் இப்படிப் பட்ட பிரச்சினை. சாதாரண திட்டங்களாக இருந்தால் உடனே நிறைவேற்றலாம். இருந்தாலும் மதுரை மாநகருடைய வளர்ச்சி இப்போது 7,8 மாவட்டங்களுக்கு முக்கியமான நகரமாக இருக்கின்ற காரணத்தினாலே அது கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டிய காரியமாகத் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இது போன்ற ஒரு திட்ட அறிக்கையை உடனடியாக இந்தத் துறை தயார் செய்து எப்படி எதிர்காலத்திலே—இவ்வளவு காலக் கெடு என்று சொல்ல முடியாது. ஏனென்றால் உடனே நிறைவேற்றுவார்களா என்று கேட்பார்கள். ஆகவே பின்

வருகின்ற காலங்களில்—எப்படி இதை நிறைவேற்றலாம் என்பதற்காக உடனடியாக இந்தத் துறை அதைப் பரிசீலனை செய்யும், அதற்கான நடவடிக்கையிலே இறங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 447, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

447—

கோணக்கிடங்கல் ஆறு, அயனாவரம் வாரிகளில் தேங்கிக் கிடக்கும் காட்டாமணக்கு.

* 10953— திரு. ப. கலியபெருமாள்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைபளிப்பாரா—

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தில், வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் கோணக்கிடங்கல் ஆறு, அயனாபுரம் வாரிகளில் காட்டாமணக்கு மண்டியிருப்பதாலும், ஆக்கிரமிப்புகள் செய்திருப்பதாலும் தண்ணீர் வடிவதில் தடங்கள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): பூதலூர் மற்றும் திருவையாறு ஊராட்சி ஒன்றிய எல்லைகளில் செல்லும் கோணக்கிடங்காற்றில் காட்டாமணக்கு மண்டியிருப்பதாலும், ஆக்கிரமிப்புகள் செய்திருப்பதாலும் தண்ணீர் வடிவதில் தடங்கள் இருந்து வந்தது. சென்ற ஆண்டில் ஏப்ரல், மே மாதங்களில் மண்வாரி இயந்திரங்களைக்கொண்டு அப்பணி நிறைவேற்றப்பட்டு இப்போது ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு மணல் மேடுகள் எல்லாம் அகற்றப்பட்டு, காட்டாமணக்குத் திட்டுகள் எல்லாம் அகற்றப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அது நல்ல நிலையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியாகிய பூதலூர் ஊராட்சி ஒன்றியத்தையும், திருவையாறு ஒன்றியத்தையும் இணைத்துச் செல்லுகின்ற அந்த அயனாபுரம் வாரியிலும், கோணக்கிடங்கல் ஆற்றிலும் காட்டா